Deposition of witness
(Chapter XXIII code of Criminal Procedure)
In the court of Judicial Magistrate No.I, Tindivanam.

**CASE NO.CC. 178/2019 PW-4**

Name : பூங்கொடி
Father / Husband name : குப்புசாமி
Village : கடவம்பாக்கம்
Age : 34
Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 this day 18.08.2025

Accused present. Both side counsel present.

**முதல் விசாரணை**

நான் தற்போது எக்ஸ்போட் கம்பெனியில் வேலை செய்கிறேன். அ.சா.1 விஜயக்குமார் என்பவரை தெரியாது. அ.சா.2, அ.சா.3, சாட்சிகள் முனியம்மாள், புஷ்பா, செல்வி, ரவிக்குமார் ஆகியோர்களை எனக்கு தெரியும். கடந்த 2017 ம் வருடம் தேதி, மாதம் நினைவில்லை, அன்று காலை 4 மணியளவில் நானும் முனியம்மாள், புஷ்பா, செல்வி, ரவிக்குமார், அ.சா.2 ஆகியோர்கள் கம்பெனிக்க சொந்தமான பேருந்தில் வேலைக்கு சென்றுகொண்டிருந்தபோது சலவாதி பேருந்து தாண்டி சென்னைக்கு செல்லும் திருப்பத்தில் நின்றுவிட்டது. எதிரில் சென்னையிலிருந்து வந்த லாரி நாங்கள் சென்ற பேருந்தின் மீது மோதியது. எங்களுடன் வந்த பெண் ஒருவர் இறந்துவிட்டார். அந்த விபத்தில் எனக்கு இடது பக்க நெஞ்சில் அடிப்பட்டது. பேருந்திலிருந்து புஷ்பா, செல்வி ஆகியோர்களுக்கம் அடிப்பட்டது. சிகிச்சைக்காக ஜிப்மர் மருத்துவமனைக்கு சென்றோம். விபத்து சம்மந்தமாக புகார் கொடுத்தார் என்று நினைவில்லை. நாங்கள் சென்ற பேருந்தை ஆஜர் எதிரி ஓட்டிவந்தார். எதிரி சரியாக வண்டியை ஓட்டினார் எதிரில் வந்த லாரி மோதிவிட்டது. போலிசார் வழக்கு சம்மந்தமாக என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

நான் எங்கு பேருந்து ஏறினேன் என்றால் கடவம்பாக்கத்தில் காலை 4 மணிக்கு

ஏறினேன். சலவாதியில் நிறுத்தம் உள்ளது என்றால் சரிதான். அன்றையதினம் சென்னைக்கு செல்ல பேருந்து சலவாதியில் நின்றிருந்தது என்றால் சரிதான். அந்த நிறுத்தத்தில் பெண் ஒருவர் ஏறினார் என்றால் சரிதான். லாரி ஓட்டுநர் தான் கவனிக்காமல் எங்கள் பேருந்தின் மீது மோதியது என்றால் சரிதான். போலிசார் விசாரணையில் எங்கள் பேருந்து வேகமாக சென்று மோதியதாக சொல்லவில்லை என்றால் சரிதான்.

Sd/ M.Elavarasi,
Judicial Magistrate No.I, Tindivanam